# உன்னை நிச்சயமாய் விடுவிப்பேன். எரே 39 : 18

**விடுதலைப் பெருவிழா காண்போம்**

**பக்தன் பாடுகிறார்**

ஆனந்த துதி ஒலி கேட்கும்
ஆடல்பாடல் சத்தமும் தொனிக்கும்
ஆகாய விண்மீனாய் அவர் ஜனம் பெருகும்
ஆண்டவர் வாக்கு பலிக்கும் – ஆ . . ஆ

விடுதலை முழங்கிடுவோமே
விக்கினம் யாவும் அகலும்
இடுக்கண்கள் சூழ்ந்திடும் வேளை
இரட்சகர் மீடபருள்வாரே
நுகங்கள் முறிந்திடும், கட்டுகள் அறுந்திடும்
விடுதலை பெருவிழா காண்போம்.
ஆனந்த துதி ஒலி கேட்கும் , கேட்கும், கேட்கும்

என் அன்பு சகோதரனே, சகோதரியே

**உன்னுடைய வாழ்வில் ஆனந்த துதி ஒலி கேட்கும்**

**ஆடல்பாடல் சத்தமும் தொனிக்கும் –** என மனமார வாழ்த்துகிறேன்.

“**என் தேவன் – உன் தேவன்.**” உன்னை நிச்சயமாய் விடுவிப்பேன்

**தானி. 3 : 17 கூறுகிறது, :** நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார். அவர் எரிகிற அக்கினிச் சூளைக்கும், ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார்.

என் அன்பு சகோதரனே சகோதரியே,

உங்கள் விசுவாச அறிக்கையும் இதுவாகவே இருக்கட்டும்.

**தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவர்**

எங்கள் கடன் பிரச்சினையிலிருந்து தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவர்
எங்கள் குழந்தையில்லா பிரச்சினையிலிருந்து தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவர்
எங்கள் பாவப் பிரச்சினையிலிருந்து , தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவர்
எங்கள் வியாதிப் பிரச்சினையிலிருந்து, தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவர்
எங்கள் பில்லிசூனியப் பிரச்சினையிலிருந்து, தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவர்
எங்கள் வியாபார நஷ்டப் பிரச்சினையிலிருந்து, தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவர்
எங்கள் மான நஷ்டப் பிரச்சினையிலிருந்து, தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவர்
எங்கள் குடும்ப சாபப் பிரச்சினையிலிருந்து, தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவர்
எங்கள் சபைப் பிரச்சினையிலிருந்து, தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவர்
எங்கள் குடும்பப் பிரச்சினையிலிருந்து, தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவர்
எங்கள் வேலை ஸ்தல பிரச்சினையிலிருந்து, தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவர்
எங்கள் வெளிநாடு பிரயாண பிரச்சினையிலிருந்து, தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவர்
எங்கள் பிரச்சினை எதுவாயிருந்தாலும், தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவர் – ஆமென்.

இவ்வாறாக ஒவ்வொரு காரியத்தையும், தேவனுடைய வெளிச்சத்திலே கொண்டு வந்து தேவனைத் துதியுங்கள்.

**பக்தன் பாடுகிறார்**

வாக்குத்தத்தம் செய்த கர்த்தரே,
வாக்குமாறா உண்மை நாதரே,
வாக்கை நம்பி வந்து நிற்கிறோம்,
வல்ல ஆவி ஊற்றுமே

தேவனே நீர், பெரியவர், பெரியவர் – என பாடுங்கள்.

**உன்னை நிச்சயமாய் விடுவிப்பேன். ஆமென்.**